**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வக்கோட்டை**
முன்னிலை: **திரு.நா.சிவபழனி, B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 07 ஆம் நாள் சனிக் கிழமை,
**குற்றவியல் பல்வகை மனு எண். 134/2026**
**பட்டியல் வழக்கு எண்.61/2024**

ரவிச்சந்திரன் ..... மனுதாரர் /எதிரி

/எதிராக/

காவல் உதவி ஆய்வாளர்,
கந்தர்வக்கோட்டை காவல் நிலையம் .... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தால் 18.02.2026 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு , இன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது , மனுதாரர் / எதிரி தரப்பில் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.K.R.வெங்கடேசன்,** அவர்கள் ஆஜராகியும் , எதிர்மனுதாரர் / குற்றமுறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த குற்றத்துரை அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும் , இரு தரப்பு வாதம், வழக்காவணங்கள் பரிசீலித்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

1. இம்மனுவானது பிரிவு 311 குவிமுச மற்றும் பிரிவு 348 BNSS ன் கீழ் ம .சா.1 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவானது , அசல் வழக்கில் அ .சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளதாகவும் , மேற்படி சாட்சிகளை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய தேவையான முதல் தகவல் அறிக்கை , புகார் ஆவணத்தின் நகல்களை பெற முடியாததால் வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்படாமல் போய்விட்டதாகவும், மேற்படி சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வது அவசியம் என்றும், எனவே அ .சா.1 முதல் அ .சா.3 வரையிலானவர்களை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபனையில் , அ.சா.1 முதல் அ .சா.3 வரையிலான சாட்சிகள் கடந்த 21.02.2025 ம் தேதியன்று முதல்

விசாரணை செய்யப்பட்டுவிட்டதாகவும், ஆனால் மனுதாரர் 18.02.2026ம் தேதியன்று இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், அதுவரை மேற்படி சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய மனுதாரர் தரப்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், மேற்படி சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யாததது பற்றி மனுவில் தெளிவாக காரணங்கள் எதுவும் கூறப்படவில்லை என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. வழக்காவணங்களை கண்ணுற்றதில், இவ்வழக்கின் அசல் வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. இந்நிலையில் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை அனுமதிக்க ஆட்சேபணை செய்யப்பட்டிருப்பினும், மனுதாரருக்கு அவர் தரப்பு வழக்கை நிரூபிக்க போதிய வாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறு இம்மனுவை அனுமதிக்க மறுக்கும் பட்சத்தில் மனுதாரருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டதாகி விடும் என்பதால் நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**5. இறுதியாக, அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகும் தேதியன்றே அவர்களை குறுக்கு விசாரணை செய்ய வேண்டும். மனுதாரர் / எதிரி அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோருக்கு தலா ரூ.500/- செலவுத்தொகையாக வழங்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 07.03.2026 இன்று இவ்அவையறிய பகரப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:24:39 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**

**இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:24:43 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**